15.10.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### உலக முட்டை தினவிழா: நாமக்கல்லில் 20,000 வேகவைத்த முட்டை விநியோகம்



**நாமக்கல்:** உலக முட்டை தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு முட்டைக்கோழி பண்ணையாளர்கள் சம்மேளனம் சார்பில் நோயாளிகள் பொதுமக்களுக்கு 20,000 வேகவைத்த முட்டைகள் இலவச வழங்கப்பட்டது.

ஆண்டுதோறும் அக்டோபர் 14-ம் தேதி உலக முட்டை தினமாக கொண்டாடப்படுகிறது. தமிழ்நாடு முட்டைக்கோழி பண்ணையாளர்கள் சம்மேளனம் சார்பில் உலக முட்டை தினவிழா நாமக்கல்லில் வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது.

சம்மேளனத் தலைவர் முத்துசாமி தலைமை வகித்தார். தொடர்ந்து நாமக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை நோயாளிகளுக்கம், முக்கிய இடங்களில், பொதுமக்களுக்கும் இலவசமாக வேகவைத்த முட்டை விநியோகம் செய்யப்பட்டது.

இதுகுறித்து சம்மேளனத் தலைவர் முத்துசாமி, துணைத்தலைவர் வாங்கிலி சுப்ரமணியன் தெரிவித்தது: உலக முட்டை தினத்தை முன்னிட்டு நாமக்கல் பகுதியில் அரசு மருத்துவமனை நோயாளிகள், பொதுமக்களுக்கு 20,000 வேகவைத்த முட்டை இலவசமாக வழங்கப்பட்டது.

முட்டையில் உள்ள சத்துக்கள், உணவில் சேர்த்துக் கொள்வதால் கிடைக்கும் பயன்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த இலவசமாக முட்டைகள் விநியோகம் செய்யப்படுகிறது.

உலக அளவில் அமெரிக்காவில் ஆண்டுக்கு ஒரு நபர் 400 முட்டை உட்கொள்கிறார். ஆனால் இந்தியாவில் சராசரியாக ஆண்டுக்கு 52 முட்டைகள் மட்டுமே உட்கொள்கிறார். அதனால் முட்டையை உணவில் கட்டாயம் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் ஏராளமான புரதசத்துக் கிடைக்கிறது என்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## இனி தபால் நிலையங்களில் மானிய விலை உணவு தானியங்கள்



புதுடில்லி : டில்லியில் ஒன்றிய நுகர்வோர் விவகார செயலாளர் ஹெம் பாண்டே தலைமையில் நடைபெற்ற அமைச்சர்கள் கூட்டத்தில் மக்களுக்கு தேவைப்படும் அத்தியாவசிய உணவு தானியங்களை தபால் நிலையங்களில் விற்க முடிவு செய்யப்பட்டது. இதுதவிர பண்டிகை காலங்களில் கையிருப்பில் உள்ள பருப்பு வகைகளை அதிகளவில் இருப்பு வைக்கவும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் 500 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகளிடம் இருந்து தானியங்கள் கொள்முதல் செய்யப்படுவதாகவும், தானியங்களுக்கான பணம் விவசாயிகளின் வங்கிக்கணக்கில் உடனுக்குடன் வரவு வைக்கப்படுவதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பை சேர்ந்த உறுப்பினர்கள், வேளாண்மை, உணவுத்துறை சார்ந்த முக்கிய அதிகாரிகள் மற்றும் இந்திய உலோகங்கள் மற்றும் கனிமங்கள் டிரேடிங் கார்ப்பரேஷன் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## கர்நாடகா வழிகாட்டுகிறது

சிப்கோ இயக்கம் உத்தரகண்ட் மாநிலத்தில் மரங்களைக் காக்கிறது. 'அபிக்கோ' என்ற இயக்கம் கர்நாடகாவில் மரங்களை காக்க மக்களால் நடத்தப்படுகிறது. 'அபிக்கோ' என்ற கன்னடச்சொல்லுக்கு 'கட்டிப்பிடித்தல்' என அர்த்தம்.

மரங்களை வெட்ட வரும் போது அபிக்கோ இயக்கத்தினர் மரங்களைக் கட்டிப்பிடித்துக் கொள்வர். மேற்குத் தொடர்ச்சி முதல் கிழக்குத் தொடர்ச்சி மலை வரை மரங்களைப் பாதுகாக்க இந்த இயக்கம் செயல்படுகிறது. அபிக்கோ இயக்கத்தின் தலைமையகமாக 'உத்தரகண்ட் மாவட்டம்' உள்ளது. பாண்டுரங்க ஹெக்டே என்பவர் அபிக்கோ இயக்கத்தை தொடங்கினார். 'பாதுகாக்க, வளர்க்க, விவேகமாக உபயோகிக்க' என்பதே அபிக்கோவின் நோக்கம்.

## புன்செய்புளியம்பட்டியில் மழை

புன்செய்புளியம்பட்டி: புன்செய்புளியம்பட்டி பகுதியில், நீண்ட நாட்களுக்கு பிறகு மழை பெய்ததால் விவசாயிகள் ஆறுதல் அடைந்தனர். கடந்த இரண்டு மாதங்களாக, புன்செய்புளியம்பட்டி சுற்றுவட்டார பகுதியில் மழை இல்லை. வெயில் வாட்டி வதைத்தது. மழை இல்லாததால், விவசாய நிலங்கள் வறண்டன. மழைவேண்டி பல இடங்களில் வழிபாடுகள் நடந்தன. இந்நிலையில், இரு நாட்களுக்கு முன் அரை மணிநேரம் மழை பெய்தது. நேற்று முன்தினம் நள்ளிரவில், விட்டு, விட்டு மழை பெய்தது. இதனால், விவசாயிகள் ஆறுதல் அடைந்தனர்.

## கி.கிரி மாவட்டத்தில் 2 வது நாளாக மழை

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இரண்டாவது நாளாக, 108.40 மி.மீ., மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த ஜூலை, 26 ம் தேதி பெய்த கனமழை மற்றும் அதைத்தொடர்ந்து, சில நாட்கள் பெய்த சாரல் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். அதன் பின்னர், இரண்டரை மாதங்களாக மழை இல்லாததால், வானம் பார்த்த பூமியாக இருந்த விவசாய நிலங்களில், சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் கருகின. சூளகிரி, ஓசூர், ஜெகதேவி, போச்சம்பள்ளி, பாரூர், காவேரிப்பட்டணம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் விவசாய பயிர்கள் தண்ணீர் இன்றி கருகியதால், விவசாயிகள் பெரிதும்

பாதிக்கப்பட்டனர். இந்நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த, 12 ம் தேதி இரவு மிதமாக மழை பெய்தது. அதைத்தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு, பாரூர், போச்சம்பள்ளி, ஒசூர், நெடுங்கல், கிருஷ்ணகிரி ஆகிய பகுதிகளில், 108.40 மி.மீ., மழை பெய்தது. இரு நாட்களாக தொடர்ந்து மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நேற்று காலை நிலவரப்படி, பாரூர் பகுதியில் அதிகபட்சமாக, 59.8, போச்சம்பள்ளியில் 26, நெடுங்கல் பகுதியில் 13, ஓசூரில் 7, கிருஷ்ணகிரியில் 2.6 மி.மீ., மழை பதிவாகி இருந்தது.

## ஓசூர் தாலுகா வேளாண் விதை பண்ணையில் ஆய்வு

ஓசூர்: ஓசூர் தாலுகாவில், நெல், சிறுதானியம், பயறு வகை மற்றும் எண்ணெய் வித்துக்கள் விதை பண்ணைகளை, வேளாண்மை இணை இயக்குனர் சபாநடேசன் ஆய்வு செய்தார். அப்போது விதை சுத்திகரிப்பு சிப்பமிடுதல், சான்று அட்டை பொருத்தும் பணிகளை பார்வையிட்டார். அதேபோல் விதை பண்ணைகளில் இருந்து இந்தாண்டு, நெல், 20 மெட்ரிக் டன், சிறுதானியங்கள், 26 மெட்ரிக் டன், பயறு வகை, 30 மெட்ரிக் டன், எண்ணெய் வித்துக்கள், 20 மெட்ரிக் டன் கொள்முதல் செய்ய திட்டமிட்டுள்ளதாக அதிகாரிகளிடம் தெரிவித்தார். விதை சான்று உதவி இயக்குனர் ராமமூர்த்தி, வேளாண் அலுவலர் செல்லதுரை உட்பட பலர் உடன் இருந்தனர்.

## குந்தா அணையில் தண்ணீர் தேக்கம் கெத்தை, பரளியில் மின் உற்பத்தி துவக்கம்

மஞ்சூர்: குந்தா அணையில், 88 அடி வரையில் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளதால், கெத்தை, பரளி மின் நிலையங்களில் மீண்டும் மின் உற்பத்தி நடந்து வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில், குந்தா, பைக்காரா நீர் மின் திட்டங்களின் கீழ், 12 மின் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் நாள்தோறும், 833.65 மெகாவாட் மின் உற்பத்தி மேற்கொள்ள முடியும்.

இந்நிலையில், நடப்பாண்டு துவக்கத்திலிருந்து, போதிய மழை இல்லாத காரணத்தினால், நீர் பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வெகுவாக குறைந்து, பல அணைகள் நிரம்பவில்லை.

ஒவ்வொரு அணையிலும், 40 முதல், 50 சதவீதம் அளவுக்கு தான் தண்ணீர் இருப்பில் உள்ளது. இதனால்,மின் உற்பத்தியிலும் சிக்கல் ஏற்பட்டது. கெத்தை, பரளி உட்பட சில மின் உற்பத்தி நிலையங்களில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. பெரும்பாலான மின் நிலையங்கள் அவ்வப்போது இயக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில், கடந்த மூன்று நாட்களாக பெய்த மழையால், மழை நீரோடைகளில் தண்ணீர் வரத்து சற்று உயர்ந்துள்ளது. இதனால், குந்தா அணையில் மொத்த அடியான 89 அடியில், தற்போது, 88 அடி வரைக்கும் தண்ணீர் தேக்கப்பட்டுள்ளது. சில மின் நிலையங்களில் மின் உற்பத்தியும் மீண்டும் துவக்கப்பட்டது.

குந்தா நீர்மின் திட்ட மேற்பார்வை செயற்பொறியாளர் ரகு கூறுகையில்,“குந்தா அணையில் நீர் நிரம்பி உள்ளதால், நேற்று முன்தினம் முதல், கெத்தை, பரளி மின் நிலையத்தில் மின் உற்பத்தி நடந்து வருகிறது.

வடகிழக்கு பருவமழை தொடர்ந்தால், மாவட்டத்தில் உள்ள அனைத்து அணைகளில் தண்ணீர் அளவு உயரும்; மின் உற்பத்தியும் சீராகும்,” என்றார்.

## பூங்காவில் 'காஸ்மாஸ்' மலர்கள் சுற்றுலா பயணிகள் வியப்பு

குன்னூர்: குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பூத்துகுலுங்கும் 'காஸ்மாஸ்' மலர்கள் சுற்றுலா பயணிகளை கவர்ந்தது.

ஆயுத பூஜை விடுமுறையையொட்டி நீலகிரிக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. கடந்த, 4 நாட்களில் மட்டும், 70 ஆயிரம் பேர் வந்திருந்தனர். இதன் ஒரு பகுதியாக, குன்னூர் சிம்ஸ் பூங்காவிலும், கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. இங்கு, இரண்டாவது சீசனுக்காக நடவு செய்யப்பட்ட, 'கேலன்டியூலா, பிரஞ்ச் மேரி கேகால்டு, கிளியேம், டெல்பீனியம், பெகோனியா, பிரிமூலா, சால்வியா, பெட்டூனியா, பேன்சி, காஸ்மாஸ்' ஆகிய மலர்களை, இவர்கள் ரசித்து செல்கின்றனர். கடந்த ஐந்து நாட்களில் மட்டும் இங்கு, 20 ஆயிரம் சுற்றுலா பயணிகள் வருகை தந்திருந்தனர். வரும் நாட்களில் இதன் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

## வேளாண், தோட்டப்பயிர்களுக்கு காப்பீடு: பயன்பெற ஆலோசனை

திண்டுக்கல், திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம் என வேளாண் இணை இயக்குனர் தங்கச்சாமி தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது: விவசாயிகள் வெள்ளம், வறட்சி, நோய் தாக்குதல் போன்ற காரணங்களால் அடிக்கடி பாதிக்கப்படுகின்றனர். இதனால்மகசூல் மற்றும் வருவாய் இழப்பும் ஏற்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு மத்திய அரசு பயிர் காப்பீடு திட்டத்தை அறிமுகம் செய்தது.

இந்த திட்டத்தால் அனைத்து விவசாயிகளும் பயன்பெற முடியும். ஏற்கனவே இருந்த திட்டத்தில் வங்கியில் கடன் பெறும் விவசாயிகள் மட்டுமே காப்பீடு செய்ய முடியும். புதிய பயிர் காப்பீட்டு திட்டத்தால் அனைத்து விவசாயிகளும் பயன்பெறலாம்.

பயிர்க்காப்பீடு: இந்த திட்டத்தில் வேளாண் பயிர்கள் நெல்-ஐஐ, நெல்-ஐஐஐ, மக்காச்சோளம், துவரை, உளுந்து, பாசிப்பயறு,நிலக் கடலை, தோட்டக்கலை பயிர்கள் வாழை, மரவள்ளிக்கிழங்கு, வெங்காயம், மிளகாய், உருளைக்கு பயிர் காப்பீடு செய்யலாம். இதில் சேர வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்திருக்க வேண்டும். அதே போல், வங்கியில் கடன் பெறும் விவசாயிகளும் சேரலாம். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் விவசாயிகளிடமிருந்து காப்பீட்டு கட்டணம் பிடித்தம் செய்யப்படும். இதில் சேர விரும்புவோர் நிலத்தின் சிட்டா அடங்கல், ரேஷன் கார்டு, ஆதார் கார்டு,

ஓட்டுநர் உரிமம் நகல், புகைப்படத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் அந்தந்த வட்டார வேளாண் உதவி அலுவலர் அலுவலகத்தில் கிடைக்கும்.

என்ன லாபம்?: இந்த திட்டத்தில் பயிர் விதைக்க இயலாமை, விதைப்பு செய்து மகசூல் கிடைக்காமை, மகசூல் கிடைத்தும் இயற்கை இடர்பாடுகள் அல்லது சரியான மகசூல் கிடைக்காமை போன்றவற்றிற்கு மாவட்ட பயீர்க்காப்பீடு ஒருங்கிணைப்பு குழு மூலம் நஷ்ட ஈடு வழங்கப்படும். இதனால் விவசாயிகள் பாதிப்பக்கப்படுவது குறையும். மேலும் தகவல்களுக்கு வேளாண் அலுவலகங்கள்,

வங்கிகள், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் பெறலாம், என தெரிவித்தார்.

## முருங்கை விதை உற்பத்தியில் விவசாயிகள்

குஜிலியம்பாறை, போதிய விலை கிடைக்காததால், முருங்கைக்காயை மரக்கிலேயே 'காயவிட்டு', விதை எடுத்து விற்க விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தமிழகத்தில், நூறு நாள் வேலை திட்டம் காரணமாக விவசாய தொழில், கூலி உயர்வு மற்றும் தொழிலாளர்கள் பற்றாக்குறை காரணமாக நசிந்து வருகிறது. பெரும்பாலான விவசாயிகள் முருங்கை விவசாயம் மற்றும் கறவை மாடு வளர்ப்பிற்கு மாறிவிட்டனர்.

தற்போது கடும் வறட்சி காரணமாக கறவை மாடு வளர்ப்பு தொழிலும் பாதித்துள்ளது. முருங்கை விவசாயமும் போதிய மழை மற்றும் விலை இல்லாததால் நசிந்து வருவதாக விவசாயிகள் குமுறுகின்றனர்.

தற்போது முருங்கை சீசன் அதிகரித்துள்ளதால், போதிய விலையின்றி, காய்களை பறிக்காமல் மரத்திலேயே முற்ற விட்டு விடுகின்றனர். பிறகு காய்களை தனியாக பறித்து, அவற்றை உரித்து விதைகளை தனியாக எடுத்து சேகரிக்கின்றனர். மாதம் ஒருமுறை அல்லது இருமுறை குறிப்பிட்ட அளவில் விதைகள் சேர்ந்தவுடன், அதை விற்பனைக்கு கொண்டு செல்கின்றனர். தற்போது ஒரு கிலோ விதை ரூ.600 வரை விற்பனையாகிறது.

குஜிலியம்பாறை விவசாயி பாபு கூறுகையில், “ஒரு கிலோ காய் பறித்துச் சென்றால் ரூ.12 க்கு தான் விற்கிறது. அதை இரண்டு நாட்களுக்கு ஒருமுறை பறித்து, வண்டியில் ஏற்றிச் சென்று விற்பதற்குள் போதும், போதும் என்றாகி விடுகிறது. அதைவிட முருங்கைக் காயை காயவைத்து விதை எடுத்து விற்றால், அலைச்சலும் இல்லை. நல்ல விலையும் கிடைக்கிறது” என்றார்.

## பழநியில் திருந்திய நெல்சாகுபடி இயந்திர நடவுமுறை துவக்கம்

பழநி, பழநி பாலசமுக்திரக்கில் இவ்வாண்டிற்கான திருந்திய நெல்சாகுபடியில் இயந்திர நடவுமுறை நெல்சாகுபடி துவங்கப்பட்டுள்ளது. பழநி வேளாண்துறை மூலம் பாலசமுத்திரம் விவசாயி பாலமுருகன் வயலில் 20ஏக்கர் பரப்பளவில் இயந்திர மூலம் நாற்றுக்கள் நடும் பணி செயல்படுத்தபட்டது.

இந்நிகழ்ச்சியில் பழநி வேளாண் உதவி இயக்குனர் சுருளியப்பன் முன்னிலை வகித்தார். பழநி சப் கலெக்டர் வினீத், இணை இயக்குனர் தங்கச்சாமி இயந்திரம் மூலம் நெல் நடவுப்பணியை துவக்கிவைத்தார்.

உதவி இயக்குனர் சுருளியப்பன் கூறுகையில்,“ பழநியில் நடவு இயந்திரம் இல்லாததால் ஒப்பந்த அடிப்படையில் தஞ்சை பகுதியில் இருந்து 5 இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்மூலம் விரைவில் நாற்றுக்களை நடுவது, 30 சதவீதம் மகசூல் அதிகரிப்பு, சாகுபடி செலவு குறைவு, ஆட்கள் பற்றாக்குறையை சமாளிப்பது என பலன்கள் கிடைக்கும்.

தற்போது 500 எக்டேர் வரை இயந்திர நடவு முறை செயல்படுத்த விவசாயிகள் முன்வந்துள்ளனர். இதற்காக ரூ.25 லட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏக்கருக்கு 5 ஆயிரம் மானியம் வழங்கப்படும். பிறவிவசாயிகளும் இம்முறையை பின்பற்ற விவசாய அதிகாரிகளை தொடர்பு கொள்ளலாம்,” என்றார்.

## தென்னையை காப்பாற்ற முயற்சி: குறைந்த விலையில் கன்றுகள்

வாங்கல்: தென்னை மரங்களை காப்பாற்ற, வாங்கல் செல்லும் வழியில் தென்னங்கன்று வளர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்கி வருகின்றனர்.

கரூர் அடுத்த வாங்கல் பகுதியில் உள்ள மாரிக்கவுண்டன்புதூரில், மாதந்தோறும் உயர்தர தென்னை நாற்றுப்பண்ணை மூலம், 100 கன்றுகள் வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதுகுறித்து, தாடிக்கொம்பு சங்கர் கூறியதாவது: தென்னை நாற்றுப்பண்ணையில், 600 முதல், 700 தென்னை மரங்கள் உள்ளன. இங்கு, தென்னை கன்றுகள் வளர்த்து, ஒரு கன்று, 50 ரூபாய்க்கு விற்கிறோம். வாங்கல் பகுதியில் இருந்து வரும் காவிரி நீர் இப்பகுதியில், 250 ஏக்கர் வரை விவசாயிகள் தங்கள் விளைநிலத்தில் பல்வேறு பயிற்களை பயிரிட்டு வருகின்றனர். மாதந்தோறும் தென்னங்கன்றுகளை, 100 வரை விற்கிறோம். மழைக்காலத்தில் அதிகமாக விற்கும், கோடை காலங்களில் தென்னங்கன்று குறைவாகத்தான் விற்கும். இப்பகுதியில் தென்னை மரங்கள் அதிகம் இருந்தாலும், ஊடுபயிராக கொய்யா, மா, முருங்கை பயிரிட்டு வருகிறோம். அதன் மூலமும் வருவாய் கிடைக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## நாட்டு கொய்யாக்காய் விற்பனை அமோகம்

கிருஷ்ணராயபுரம்: லாலாப்பேட்டை பஸ் ஸ்டாண்ட் பகுதியில், கொய்யக்காய் மற்றும் பழம் விற்பனை சூடுபிடிக்துள்ளது. கிருஷ்ணராயபுரம் தாலுகா, திருக்காம்புலியூர் பகுதியில் விளையும் நாட்டு கொய்யப்பழம் தற்போது செடிகளில் காய்த்து வருவதால், அவற்றை பறித்து, நகர்பகுதியில் விற்பனை செய்வது அதிகரித்துள்ளது. இதை லாலாப்பேட்டை பகுதியில் கொண்டு வந்து வியாபாரிகள் விற்று வருகின்றனர். இந்த கொய்யாக்காய் மற்றும் பழம் காவிரி நீர் பாசன பகுதியில் இருந்து சாகுபடி செய்யப்படுவதால், இனிப்பகாவும், சுவையாகவும் உள்ளது. அதனால், சர்க்கரை வியாதி உள்ளவர்களும், பொதுமக்களும் விருப்பத்துடன் வாங்கிச்செல்கின்றனர். லாலாப்பேட்டை பஸ் ஸ்டாண்ட் பகுதியில், ஒரு கிலோ, 60 ரூபாய் என்ற விலையில் விற்கப்பட்டது.

## விவசாயிகளுக்கு இயற்கை உரம் தயாரித்தல் பயிற்சி வழங்கல்

கூடலூர், குள்ளப்புரம் வேளாண் தொழில் நுட்ப கல்லூரி இறுதி ஆண்டு மாணவர்கள், கிராம தங்கல் திட்டக்தின் கீழ் கம்பம் வட்டாரக்தில் பயிற்சி பெற்று வருகின்றனர். இதில் ஒரு பகுதியாக புளூரோட்டஸ் வித்துக்கள் (காளான் விதை) மூலம் பண்ணைக்கழிவுகளை விரைவாக மக்கச் செய்து இயற்கை உரம் தயாரிப்பது குறித்து, கம்பம் அருகே விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் அளித்தனர். புளூரோட்டஸ், நுாற்புழுக்களை கட்டுப்படுத்துவதுடன் சிறந்த இயற்கை உரமாக பயன்படுகிறது.

இது மற்ற இயற்கை உரங்களை விட குறைந்த எடையில், அதிக நுண் சத்துக்களை தாவரத்திற்கு அளிக்கிறது என தெரிவித்தனர். இதில் மாணவர்கள் அரீஷ்கவுதம், தவசீலம், விஜய், ராஜேஸ்குமார், சேதுபதி, ஜெகதீஸ், கதிரவன், யாதவ்பிரகாஷ், ஜெக்பின் சிங்கராயர் கலந்து கொண்டனர்.

களப்பயிற்சி

சின்னமனூர்: குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்ப கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் ஆனந்த், குணசேகர், நரேஷ்குமார், ராமர், சசிக்குமார், விக்னேஸ்வரன், டேனியல்ராஜ், புகழேந்தி, அருண்குமார், முத்துகருப்பையா ஆகியோர் , கிராமதங்கல் திட்டத்தில் ஓடைப்பட்டியில் தங்கி களப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

கோவக்காய் கொடியில் மஞ்சள் ஒட்டு பொறி மூலம் சாறுண்ணி பூச்சிகளான

அஷ்வினி, வெள்ளை ஈ போன்றவற்றை கட்டுப்படுத்துவது குறித்த செயல் விளக்கமளித்தனர்.

ஒரு எக்டேருக்கு 12 மஞ்சள் நிற அட்டையில் விளக்கெண்ணெய், கிரீஸ் தடவி வைக்க விவசாயிகளுக்கு அறிவுறுத்தினர்.

## மூன்றாவது நாளாக பெய்த மழையால் மக்கள் மகிழ்ச்சி

அம்மாபேட்டை: சேலத்தில், மூன்று நாளாக, தொடர்ந்து மழை பெய்ததால், மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். சேலம் மாவட்டத்தில், கடந்த, 11ம் தேதி இரவு துவங்கி, தொடர்ந்து மூன்று நாட்களாக மழை பெய்தது. நேற்று முன்தினம், காடையாம்பட்டி, 35.4 மி.மீ., ஆத்தூர், 21.4 மி.மீ., வாழப்பாடி, 10 மி.மீ., ஏற்காடு, 2.8 மி.மீ., பெத்தநாயக்கன்பாளையம், 22 மி.மீ., என, மாவட்டம் முழுவதும், 91.6 மி.மீ., மழை பதிவானது. தொடர்ந்து பெய்து வரும் மழையால், மாநகரில் குளிர்ச்சியான தட்பவெட்பநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால், பகல் நேரங்களில் கூட, குளிர்ச்சியான காற்று வீசி வருகிறது. இந்த மழைக்கு முன்னதாக, வெயிலின் தாக்கத்தில் அவதியடைந்த மக்கள், குளிர்காற்று வீசுவதால், மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மகசூல் அதிகரிக்க தேனீ பெட்டி தேவை

பனமரத்துப்பட்டி: பூக்கள், காய்கறி, பழங்களில், மகசூல் அதிகரிக்க, தேனீ பெட்டி வழங்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து, சேலம் மாவட்ட வேளாண் உற்பத்தி குழு உறுப்பினர் சண்முகம் கூறியதாவது: பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், பூக்கள், காய்கறி, பழங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. தேனீ வளர்ப்பு மூலம், அயல் மகரந்த சேர்க்கை நடந்து, அதிக மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. விவசாயிகள் தோட்டத்தில், தேனீ வளர்த்தால், கூடுதல் வருமானம் கிடைக்கும். அதனால், விவசாயிகளுக்கு தலா ஒரு தேனீ பெட்டி வழங்கி, தேனீ வளர்ப்பு பயிற்சி அளிக்க, தோட்ட கலைத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறிவார்.

## சொட்டு நீர் பாசனம் விவசாயிகளுக்கு பயிற்சி

ராமநாதபுரம், கமுதி அருகே பழத்தோட்ட பண்ணையில் விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசனம் குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது.தோட்டக்கலைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு பயனுள்ள திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. சொட்டு நீர்ப்பாசன திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்க திட்டங்களில் தேனி வளர்ப்பு திட்டங்களுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. கமுதி அருகே வல்லந்தை கிராமத்தில் பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த விவசாயிகள் 300 ஏக்கரில் பழத்தோட்டம் அமைத்துள்ளனர். 70 ஏக்கரில் மா, 40 ஏக்கரில் நெல்லி, 15 ஏக்கரில் கொய்யா, 10 ஏக்கரில் சப்போட்டா வைத்து பராமரிக்கின்றனர்.

இங்கு ஏற்றுமதிக்கு உகந்த அல்போன்சா, ஹிமாம்பசந்த், பங்கனப்பள்ளி, ரத்னா, மல்லிகா போன்ற மா ரகங்கள் உயரிய தொழில் நுட்ப முறையில் சாகுபடி செய்யப்படுகிறது. அடர் நடவு முறையில் மா சாகுபடி செய்யப்பட்டு தோட்டக்கலைத்துறை மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பழத்தோட்டமானது அப்பகுதி மக்களுக்கு ஒரு செயல்விளக்க பண்ணையாக உள்ளது. இங்கு உள்ளூர் விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை மூலம் தேனீ வளர்ப்பு பயிற்சி, சொட்டு நீர்ப்பாசன பயிற்சி அளிக்கப்படுகிறது. கலெக்டர் நடராஜன் இங்கு நேரடி ஆய்வு செய்தார். இப்பண்ணை சிறப்பாக செயல்படுவதற்காக பஞ்சாப் விவசாயிகளை பாராட்டிய கலெக்டர், மாவட்ட விவசாயிகள் இதனை பார்வையிட்டு தங்கள் தோட்டங்களிலும் செயல்படுத்த வேண்டும், என்றார். பரமக்குடி சப் கலெக்டர் சமீரன், மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் தமிழ் வேந்தன், கலெக்டரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) வெள்ளைச்சாமி, தோட்ட உரிமையாளர் மன்மோகன்சிங் ஆகியோர் உடன் இருந்தனர்.—

## நெல் விதைகள் முளைப்பதற்கு டேங்கர் லாரி தண்ணீர் பாசனம்

ஆர்.எஸ்.மங்கலம், பருவமழை பொய்த்துவிட்டதால் நேரடி விதைப்பு செய்துள்ள வயல்களில் நெல் விதைகள் முளைப்பதற்காக விவசாயிகள் டேங்கர் லாரி தண்ணீர் மற்றும் ஆழ்குழாய் தண்ணீரை விலைக்கு வாங்கி தெளிப்புநீர் பாசனம் செய்துவருகின்றனர்.

ஆர்.எஸ்.மங்கலம், ஆனந்தூர், சனவேலி, செங்குடி, பூலாங்குடி, சேத்திடல், சீனாங்குடி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த மாதம் பெய்த மழையை பயன்படுத்தி

சம்பா சாகுபடிக்காக விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு செய்தனர். பருவமழை பொய்த்துவிட்டதாலும், கடும் வறட்சி நிலவுவதாலும் நெல் விதைகள் முளைப்பு திறன் குறைந்துள்ளது. அதிர்ச்சியடைந்துள்ள விவசாயிகள் விதைகள் முளைப்பதற்கு ஈரப்பதம் தேவை என்பதால் டேங்கர் லாரி, ஆழ்குழாய் தண்ணீரை விலைக்கு வாங்கி தெளிப்புநீர் பாசனம் செய்கின்றனர். இதன் பின்னரும் விதைகள் முளைக்காவிட்டால் மீண்டும் உழவு செய்து நெல் விதைப்பு செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் நடப்பு சம்பா பருவத்திற்கு விவசாயிகள் ஒவ்வொருவரும் அதிகம் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து ஆர்.எஸ்.மங்கலம் விவசாயி ராமையா கூறுகையில்,“ நெல் விதைகள் முளைப்பு திறனை இழந்து வருவதால் டேங்கர் லாரி, ஆழ்குழாய் தண்ணீரை விலைக்கு வாங்கி வயல்களில் தெளித்து வருகிறோம். இதற்காக ஏக்கருக்கு குறைந்தபட்சம் 5 ஆயிரம் ரூபாய் வரை செலவிட வேண்டியுள்ளது. காலம் கடந்து நெல் விதைகள் முளைத்தால் பயிர்கள் வளர்ச்சி குன்றவும், பூச்சி தாக்குதல்களுக்கு உள்ளாகவும் வாய்ப்பு உள்ளது,” என்றார்.

## பொள்ளாச்சிக்கு செல்லும் திருப்புவனம் மாட்டுச்சாணம்

திருப்புவனம், திருப்புவனம் வட்டாரத்திலுள்ள கால்நடைகளின் சாணம் எருவாக பொள்ளாச்சியில் அதிகளவு பயன்படுத்துவதால் வியாபாரிகள் இப்பகுதியில் முகாமிட்டுள்ளனர்.

திருப்புவனம் வட்டாரத்தில் ஏனாதி, தேளி, பாப்பாகுடி, கணக்கன்குடி உள்ளிட்ட பகுதிகளில் பசு மாடு, எருமை மாடு, வெள்ளாடு, செம்மறி ஆடு உள்ளிட்ட கால்நடைகள் அதிகளவில் வளர்க்கப்படுகின்றன.

விவசாய காலங்கள் தவிர மற்ற காலங்களில் விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பில் தான் அதிகளவு லாபம் கிட்டும். பால், தயிர், நெய் போன்றவற்றை விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகளின் அன்றாட செலவுக்கு வருவாய் கிட்டும்.

இதுதவிர மாட்டுச்சாணங்களை சேகரித்து வைத்து விவசாயிகள் தங்களது நிலங்களுக்கு இயற்கை உரமாக பயன்படுத்துவது வழக்கம். கடந்த இரு ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால் விவசாயம் நடைபெறவில்லை. மாட்டுச்சாணத்தை பயன்படுத்தாமல் விவசாயிகள் சேகரித்து வைத்திருந்தனர்.

கடந்த ஒரு வார காலமாக பொள்ளாச்சி பகுதிகளில் இருந்து வரும் வியாபாரிகள் தென்னை, வாழை போன்ற பயிர்களுக்கு உரமாக பயன்படுத்த மாட்டுச்சாணத்தை சேகரித்து வருகின்றனர்.

15 கிலோ எடை கொண்ட ஒரு மூடை மாட்டுச்சாணம் 35 ரூபாய்க்கும், ஆட்டுச்சாணம் 50 ரூபாய்க்கும் வாங்கிச் செல்கின்றனர்.

பொள்ளாச்சி வியாபாரி சங்கரன் கூறுகையில்; எங்கள் பகுதிகளில் மாட்டுச்சாணம் ஈரமாக இருக்கும் வயல்களில் கரைத்து தான் தெளிக்க முடியும். திருப்புவனம் வட்டாரத்தில் நன்கு உலர்ந்து உள்ளது. இவற்றை வயல்களில் எளிதாக தூவ முடியும். தென்னை, வாழை போன்றவற்றின் அடிப்பகுதியில் மட்டும் உரமாக பயன்படுத்துவதும் எளிது என்பதால் வாங்கிச் சென்று விற்பனை செய்து வருகிறேன். ஒரு லாரிக்கு 400 முதல் 500 மூடை வரை ஏற்றலாம் என்றார்.

## தொடர் மழையால் விவசாயிகள் நிம்மதி

காரிமங்கலம்: காரிமங்கலம் சுற்றுவட்டார பகுதியில், இரண்டு நாட்களாக இரவில் தொடர் மழை பெய்து வருவதால், நிலக்கடலை சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.காரிமங்கலம் மற்றும் பெரியாம்பட்டி, மாட்லாம்பட்டி ஆகிய சுற்றுவட்டார பகுதியில் வானம் பார்த்த பூமியில் அதிக பரப்பில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது. செடி வளர்ந்து பூக்கள் பூக்கும் தருவாயில் மழை பொய்த்து போனதால், பல இடங்களில் நிலக்கடலை செடிகள் கருகி வந்தது. இதனால் விவசாயிகள் கவலையடைந்தனர். இந்நிலையில், காரிமங்கலம் சுற்றுவட்டார பகுதிகளில், இரண்டு நாட்களாக இரவு நேரங்களில் கன மழை பெய்து வருகிறது. தொடர் மழையால், நிலக்கடலை சாகுபடி செய்துள்ள நிலங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. இதன் மூலம் கருகியிருந்த நிலக்கடலை பயிரில், 50 சதவீத செடிகளாவது உயிர் பிழைக்கும் என்பதால், விவசாயிகள் சற்று நிம்மதியடைந்துள்ளனர்.

## பலவித உயிர்கள், மூலிகை தாவரம் குறித்த ஒருநாள் பயிற்சி பட்டறை

அரூர்: அரூரை அடுத்த, எருமியாம்பட்டி இ.ஆர்.கே., கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், நவீன உலகில் பலவித உயிர்கள் மற்றும் மூலிகை தாவரங்கள் பற்றிய ஒருநாள் மாநில அளவிலான பயிற்சி பட்டறை நடந்தது. இ.ஆர்.கே., கல்வி

நிறுவன காளாளர் செல்வராஜ் தலைமை வகித்தார். முதல்வர் பால்வண்ணன் துவக்க உரை ஆற்றினார். தாவரவியல் துறை தலைவர் மகாலிங்கம் வரவேற்றார். துணை முதல்வர் சக்தி பயிற்சிப்பட்டறை நோக்கம் குறித்து கூறினார். முதல் அமர்வில், நாமக்கல் விவேகானந்தா மகளிர் கல்லூரி தாவரவியல் துறை தலைவர் பிரபாகரன் சிறப்பாளராக கலந்து கொண்டார். இரண்டாவது அமர்வில், கும்ப கோணம் அரசு கலைக்கல்லூரி விலங்கியல் துறை உதவி பேராசிரியர் சரபோஜி பங்கேற்றார். மூன்றாவது அமர்வில், அரூர் அகஸ்திய மூலிகை மற்றும் சமூக அறக்கட்டளையை சேர்ந்த சிக்தா சண்முக சுந்தரம் பங்கேற்றார். கல்லூரி விலங்கியல் துறை தலைவி கிருபா நன்றி கூறினார்.

## கரும்பு அரவை துவங்குவது குறித்த ஆலோசனை கூட்டம்

அரூர்: அரூர், கோபாலபுரத்தில் உள்ள சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில், 2016-17ம் ஆண்டுக்கான கரும்பு அரவை துவங்குவது குறித்த ஆலோசனை கூட்டம் நடந்தது. கரும்பு பெருக்க அலுவலர் குணசேகரன் பேசுகையில்,"நவம்பர், 4ம் தேதி அரவை துவக்கி, மே 26ம் தேதிக்குள், ஐந்து லட்சம் டன் அரவை கரும்பு செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக," கூறினார். சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை அனைத்து கரும்பு விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு செயலாளர் ராஜசேகரன் பேசியதாவது: விவசாயிகளுக்கு ஆலை நிர்வாகம் ஊக்கத்தொகை, இடுபொருட்கள் வழங்குதல் உள்ளிட்ட, எந்த உதவிகளையும் செய்யவில்லை. இரண்டு ஆண்டுகளாக ஆலையின் வரவு, செலவு குறித்த அறிக்கை வெளியிடப்படவில்லை. நிர்வாக குழுவினர் புதிதாக வேலைக்கு ஆட்களை நியமனம் செய்தல், இடமாற்றம் போன்றவை மூலம் வருமானம் பார்ப்பதையே குறிக்கோளாக கொண்டுள்ளனர். இவ்வாறு அவர் பேசினார்.

பொருளாளர் சண்முகம் பேசியதாவது: கடந்த, 2014-15ம் ஆண்டில் விவசாயிகளிடமிருந்து, டன் ஒன்றுக்கு, 104 ரூபாய் பிடித்தம் செய்யப்பட்டது. அதை இதுவரை வழங்கவில்லை. பிற ஆலைகளுக்கு கடனாக வழங்கப்பட்ட பணமும் இதுவரை வசூலிக்கப்படவில்லை. நிர்வாக குழுவில் உள்ள, 17 பேரில், இரண்டு பேர் மட்டுமே கூட்டத்திற்கு வந்துள்ளனர். இவ்வாறு அவர் பேசினார்.

இறுதியாக பேசிய மேலாண்மை இயக்குனர் கவிதா, விவசாயிகளின் கோரிக்கைகள் குறித்து அரசுக்கு பரிந்துரை செய்வதாக பேசினார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### காஷ்மீர் ஆப்பிள்கள் விற்பனையில் சாதனை



ஜம்மு காஷ்மீர்: ஜம்மு காஷ்மீர் மாநிலம், பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள பள்ளத்தாக்கில் அமைதியின்மை நிலைமை உள்ள போதிலும் இந்த பருவத்திற்கான காஷ்மீர் ஆப்பிள்கள் விற்பனையில் சாதனை படைத்துள்ளது.

**புற்றுநோய் வராமல் தடுக்கும் மருத்துவ முறைகள்**




புற்றுநோய் வராமல் தடுப்பது குறித்தும், அதற்கான மருத்துவ முறைகள் பற்றியும் நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் பார்க்கலாம். புற்றுநோய் வராமல் காத்துக்கொள்வது என்பது அவசியமான ஒன்று. சத்துள்ள உணவுகளை எடுத்துக் கொண்டால் புற்றுநோய் வராமல் தடுக்கலாம். புற்றுநோய்க்கு நெல்லிக்காய் அற்புதமான மருந்தாக விளங்குகிறது. புற்றுநோய் வராமல் தடுக்க கூடியது. இதேபோல் துளசியும் அற்புத மருந்தாகிறது.

நோய் எதிர்ப்பு சக்தி உடைய இது நுண்கிருமிகளை தடுக்கிறது. புற்றுநோய் வராமல் தடுக்கும் தன்மை கொண்டது. துளசியை பயன்படுத்தி புற்றுநோய் வராமல் தடுக்கும் தேனீர் தயாரிக்கலாம். ஒருபிடி அளவு வில்வ இலை, ஒருபிடி துளசி, சிறிது அருகம்புல் ஆகியவற்றை சேர்த்து நீர்விட்டு நன்றாக அலசி எடுக்கவும். இதில், ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு கொதிக்க வைக்கவும். வடிக்கட்டி வாரம் ஒருமுறை இந்த தேனீரை குடித்துவர புற்றுநோய் வராமல் தடுக்கலாம்.

குழந்தைகள் 20 மில்லி அளவிலும், பெரியவர்கள் 50 முதல் 100 மில்லி அளவுக்கும் இந்த தேனீர் குடிக்கலாம்.

அருகம்புல் ஒரு நல்ல மருந்தாகிறது. அதிக புரதச்சத்து உடையது. நோய் நீக்கியாக விளங்கும் அருகம்புல் மூப்பை தடுக்கிறது. துளசி பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. உச்சி முதல் பாதம் வரை வரும் நோய்களுக்கு மருந்தாகிறது. வில்வம் நோய் எதிர்ப்பு சக்தி உடையது. நெல்லிக்காயை பயன்படுத்தி புற்றுநோயை தடுக்கும் மருந்து தயாரிக்கலாம்.
ஒரு பெரிய நெல்லிக்காயின் சதை பகுதியை நீர்விடாமல் அரைத்து ஒரு ஸ்பூன் அள்வுக்கு எடுக்கவும். இதனுடன் கால் ஸ்பூன் மஞ்சள் பொடி சேர்க்கவும். இதில், ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி வாரம் ஒருமுறை குடித்துவர உள் உறுப்புகள் பலப்படும். புற்றுநோய் வராமல் தடுக்கும். நெல்லிக்காய் ஆயுள் வளர்க்கும் கனியாக விளங்குகிறது. முதுமையை தடுக்க கூடிய மருத்துவ குணங்களை கொண்டது. மஞ்சள் நோய் எதிர்ப்புசக்தி மிக்கது. நெல்லி, மஞ்சள் ஆகியவை செல்களுக்கு சத்துக்களை அளிக்கிறது.

பப்பாளியை பயன்படுத்தி மருந்து தயாரிக்கலாம். பப்பாளி விழுது ஒரு ஸ்பூன் அளவுக்கு எடுக்கவும். இதனுடன் சிறிது சீரகம், பனங்கற்கண்டு சேர்க்கவும். இதில் ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு கொதிக்க வைக்கவும். வடிகட்டி வாரம் இருமுறை குடித்துவர கல்லீரல் மற்றும் குடலில் புற்று வராமல் தடுக்கலாம். பல்வேறு நன்மைகளை கொண்ட பப்பாளி ஒரு அற்புதமான உணவாகிறது. சர்க்கரை நோய், கேன்சருக்கு மருந்தாகிறது. புற்றுநோயை ஆரம்ப கட்டத்தில் குணப்படுத்தும் தன்மை கொண்டது.

கேரட் புற்றுநோய்க்கு மருந்தாகிறது. நோய் எதிர்ப்புசக்தி உடைய இது பல்வேறு சத்துக்களை கொண்டது. கேரட்டை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொண்டால் புற்றுநோய் வராமல் தடுக்கலாம். இதேபோல், பாகற்காய் புற்றுநோயை தடுக்கும் மருந்தாக விளங்குகிறது. சர்க்கரை நோயாளிக்கு மருந்தாக பயன்படும் பாகற்காய் கேன்சர் வராமல் தடுக்கிறது.

# மொத்த விலை பண வீக்கம் 3.57%ஆக சரிவு




புதுடெல்லி: மொத்த விலை பண வீக்கம், 2 ஆண்டுகளுக்கு பிறகு கடந்த மாதத்தில் 3.57 சதவீதமாக சரிவடைந்தது.கடந்த செப்டம்பர் மாதத்தில் சில்லரை விலை பண வீக்கம் சரிவடைந்தது. இதை தொடர்ந்து நேற்று வெளியிடப்பட்ட புள்ளிவிவரத்தின்படி மொத்தவிலை பண வீக்கமும் சரிவடைந்துள்ளது. கடந்த மாதம் மொத்த விலை பண வீக்கம் 3.57 சதவீதமாக உள்ளது. இதற்கு முந்தைய மாதம் இது 3.74 சதவீதமாக இருந்தது. காய்கறி விலை சரிவே இதற்கு காரணம்.

மொத்த விலை பண வீக்கத்தில் உற்பத்தி பொருட்களின் பங்களிப்பு 64.97 சதவீதம். இது ஆகஸ்ட்டில் 2.42 சதவீதமாக இருந்தது, கடந்த மாதம் 2.48 சதவீதமாக உயர்ந்துள்ளது.

## பண்டிகை கால விலை உயர்வை தடுக்க தபால் நிலையங்களில் பருப்பு விற்பனை




புதுடெல்லி: தபால் நிலையங்களில் குறைந்த விலையில் பருப்பு வகைகளை விற்பனை செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. நுகர்வோர் விவகாரத்துறை செயலாளர் ஹெம் பாண்டே தலைமையில் நேற்று கூட்டம் நடந்தது. இதில் உணவு, விவசாயம், நுகர்வோர் விவகாரம், வர்த்தகம், நிதித்துறை அமைச்சகங்கள் மற்றும் எம்எம்டிசி, நாபெட் நிறுவன அதிகாரிகள் பங்கேற்றனர். இதுகுறித்து நுகர்வோர் அமைச்சக மூத்த அதிகாரி ஒருவர் கூறியதாவது:பண்டிகை சீசன் போன்ற காலக்கட்டங்களில் பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உயர்வு ஏற்படும். இதை தடுக்க மத்திய அரசு இவற்றை கொள்முதல் செய்து இருப்பு வைத்துள்ளது. மாநிலங்களில் அரசு விற்பனை மையங்கள் பெரும்பாலான இடங்களில் இல்லை. இதனால் தபால் நிலையங்கள் மூலம் மத்திய அரசிடம் இருப்பில் உள்ள பருப்பு வகைகளை விற்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுபோல், கடலைப்பருப்பு விலையை கட்டுப்படுத்த, சில்லரை விற்பனைக்காக அரசு ஏஜென்சிகளுக்கு பண்டிகை தேவையை கருத்தில் கொண்டு தாராளமாக வழங்க மத்திய அரசு திட்டமிட்டு–◌ளது என்றார்.

நாடு முழுவதும் 1.54 லட்சம் தபால் நிலையங்கள் உள்ளன. இவற்றில் 1.39 லட்சம் தபால் நிலையங்கள் ஊரக பகுதிகளில் உள்ளன. துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு

ஆகியவற்றை மாநில அரசுகளுக்கும், நாபெட், மதர் டயரி போன்ற அரசு ஏஜென்சிகளுக்கும் கடந்த சில மாதங்களாக மத்திய அரசு வழங்கி வருகிறது. நடப்பு ஆண்டில் உள்நாட்டில் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்தும், இறக்குமதி செய்தும் 20 லட்சம் டன் பருப்பு வகைகளை இருப்பு வைக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

## உளுந்தூர்பேட்டை அருகே இயந்திர முறையில் நெல் நடவு முறை

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை அருகே திருநாவலூர் கிராமத்தில் இயந்திர முறையில் நெல் நடவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் சுப்பிரமணியன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது விவசாயி நரசிம்மன் உள்ளிட்டவர்களிடம் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மானிய திட்ட உதவிகள் முறையாக கிடைக்கிறதா என கேட்டறிந்தார். மேலும் இயந்திர நடவு முறையின் மூலம் ஏக்கருக்கு நெல் மகசூல் கிடைக்கும் விவரங்கள் குறித்து கேட்டறிந்தார். அப்போது கரும்புக்கான நிலுவை தொகை இதுவரையில் வழங்கப்படவில்லை என விவசாயிகள் சார்பில் முருகன் என்பவர் கோரிக்கை வைத்தார். இது குறித்து உரிய நடவடிக்கை எடுத்து கரும்பு விவசாயிகளுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.இந்த ஆய்வின் போது உதவி ஆட்சியர் சரபு, நேர்முக உதவியாளர் சுரேஷ், மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ராமலிங்கம், துணை இயக்குனர் செல்வசேகர், வேளாண்மை உதவி இயக்குனர் தேவநாதன், தோட்டக்கலை உதவி இயக்குனர் அருள்மணி, விதை சான்று அலுவலர் ஜோதிராமலிங்கம், உதவி அலுவலர்கள் அருட்செல்வன், ராஜேஷ், கோபாலகிருஷ்ணன், ராஜ்குமார் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.முன்னதாக மழையின் போது பாதிக்கப்பட்ட பயிர் காப்பீடு செய்து இருந்த விவசாயிகளுக்கு ரூ.14 ஆயிரத்து 430 காப்பீட்டு தொகையை வழங்கினார்.

## □6 லட்சத்திற்கு நிலக்கடலை ஏலம்

இடைப்பாடி, : இடைப்பாடி அருகே கொங்கணாபுரத்தில் 300 மூட்டை நிலக்கடலை □6 லட்சத்திற்கு ஏலம் போனது.

சேலம் மாவட்டம், இடைப்பாடி அருகே கொங்கணாபுரத்தில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வெள்ளி, ஞாயிறு மற்றும் செவ்வாய்க்கிழமையில் நிலக்கடலை ஏலம் நடப்பது வழக்கம். நேற்று நடந்த ஏலத்திற்கு பூலாம்பட்டி, கோனேரிப்பட்டி, செட்டிப்பட்டி, குள்ளம்பட்டி, சின்னப்பம்பட்டி, கோரணம்பட்டி பகுதிகளில் இருந்து 300 மூட்டை நிலக்கடலைகளை விவசாயிகள் கொண்டு வந்தனர். இதில் 60 கிலோ ஈரப்பதம் கொண்ட மூட்டை □1600 முதல் □1850 வரையும், உலர்ந்த நிலக்கடலை 60 கிலோ கொண்ட மூட்டை □2 ஆயிரம் முதல் □3 ஆயிரம் வரை ஏலம் போனது. மொத்தம் 300 மூட்டை நிலக்கடலை □6 லட்சத்திற்கு ஏலம் போனது.

## 650 மூட்டை பருத்தி □12 லட்சத்துக்கு ஏலம்

நாமக்கல்: நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி ஏலம் நடந்தது. இதில், நாமக்கல், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம்பட்டி, புதுச்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும், வெளிமாவட்டங்களில் இருந்தும் ஏராளமான விவசாயிகள் தங்களது விளைநிலங்களில் அறுவடை செய்த 650 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இந்த பருத்தி மூட்டைகள் □12 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு □5 ஆயிரத்து 245 முதல் □5 ஆயிரத்து 926 வரை ஏலம் போனது. இவற்றினை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம், கரூர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

**திருச்செங்கோட்டில் திடீர் மழை**

திருச்செங்கோடு: திருச்செங்கோடு மற்றும் சுற்று வட்டார பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு திடீரென பலத்த மழை ெகாட்டியது. இதனால் ரோடுகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சாக்கடைகள் நிரம்பி, கழிவுநீர் சாலையில் சென்றது. அதே நேரத்தில், கடந்த சில மாதங்களாக மழை பெய்யாததால், பின்பட்டத்தில் விதைக்கப்பட்ட நிலக்கடலை காய்ந்த நிலையில் இருந்தது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் பெய்த இந்த மழை, நிலக்கடலை சோளம், ஆமணக்கு, துவரை ஆகியவற்றுக்கு உகந்ததாக இருக்கும் என கூறப்படுகிறது.

**கன மழை எதிரொலி கன்னிவாடி சந்தையில் ஆடு விலை அதிரடி உயர்வு**

தாராபுரம், :திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அடுத்த மூலனூர் அருகேஉள்ளது கன்னிவாடி. வெள்ளிக்கிழமைதோறும் இங்கு நடைபெறும் ஆட்டுச்சந்தை புகழ் பெற்றது. இங்கு சுண்ணாம்பு, கந்தக சத்து நிறைந்த மேய்ச்சல் நிலங்களில் மேயும் ஆடுகளின் இறைச்சி சுவை மிகுந்ததாக உள்ளதால், மட்டன் பிரியர்களிடையே கன்னிவாடி ஆடுகளுக்கு அதிக வரவேற்பு உள்ளது.

கன்னிவாடி சந்தைக்கு வாரம்தோறும் சுற்றுவட்டார கிராமங்களிலிருந்து 8 ஆயிரம் முதல் 10 ஆயிரம் செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும் விவசாயிகளால் விற்பனைக்கு கொண்டு வரப்படுவது வாடிக்கை. கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக பருவ மழை பொய்த்து, மேய்ச்சலுக்கு இயற்கை தீவனங்கள் இல்லாததால் ஆடுகள் விலை வீழ்ச்சியில் இருந்து வந்தது. 8 கிலோ எடை கொண்ட ஒரு செம்மறி ஆடு ரூ.2,400 முதல் ரூ.2,600 வரை விலைபோனது.

தீவன பற்றாக்குறையால் விவசாயிகள் ஆடுகளை கிடைத்த விலைக்கு விற்று தேவைகளை சமாளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் சந்தைக்கு அதிக அளவில் ஆடுகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இந்நிலையில், நேற்று மாலை முதல் விடிய, விடிய பெய்த கன மழையால் மேய்ச்சல் காடுகளில் தண்ணீர் தேங்கியது.

இனி, கால்நடைகளுக்கான இயற்கை தீவனத்திற்கு தட்டுப்பாடு ஏற்படாது என்பதால், ஆடுகளை விற்பனை செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டாமல், கூடுதலாக ஆடுகளை வாங்கி வளர்க்க முனைப்பு காட்டினர். இதனால், கன்னிவாடி ஆட்டுச்சந்தைக்கு சுமார் 2 ஆயிரம் ஆடுகள் மட்டுமே விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன.

விலையும் உயர்த்தி செம்மறி ஆடு ஒரு கிலோ ரூ.450 முதல் ரூ.480 வரை விலை கூறப்பட்டது. ஆடுகளின் விலை அதிரடியாக உயர்ந்ததால் இறைச்சிக்காக ஆடுகளை வாங்க வந்த வியாபாரிகளும், வளர்ப்புக்காக வாங்க வந்த விவசாயிகளும் திகைப்படைந்தனர்.விலை கட்டுப்படியாகாத விவசாயிகளும், வியாபாரிகளும் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர். அடுத்து வரும் வாரங்களிலும் ஆடுகளின் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது.

## காங்கயம், வெள்ளக்கோவில் பகுதியில் விதைப்பு பணியில் விவசாயிகள் தீவிரம்

காங்கயம், :காங்கயம், வெள்ளக்கோவில் பகுதியில் நேற்று முன்தினம் பரவலாக பெய்த மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் விதைப்பு பணிகளில் தீவிரமாக உள்ளனர். காங்கயம் பகுதியில் ஊதியூர், வட்டமலை, ஆரத்தொழுவு, கரியாக்கவுண்டன்புதூர், காடையூர், சிவன்மலை உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. வெள்ளக்கோவில் சுற்று வட்டார பகுதியிலும் நல்ல மழை பெய்தது. இந்த மழையை பயன்படுத்தி விவசாயிகள், மானாவாரி நிலங்களில் பயறு விதைப்பை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக சோளம், நரிப்பயறு, தட்டைப்பயறு, பாசிப்பயறு உள்ளிட்ட பயறு வகைகளை விதைப்பு செய்து வருகின்றனர்.

வழக்கமாக, தென்மேற்கு பருவ மழை துவங்கும்போதே விதைப்பு பணிகளை துவங்கிவிடுவர். இந்த தருணத்தில் விதைத்த பயிர்கள் துளிர்விட்டு மேய்ச்சல் நிலங்கள் பசுமை போர்த்தியிருக்கும். ஆனால், நடப்பாண்டு பருவமழை காலம் தாழ்த்தி துவங்கியதால் தற்போது இந்த பணிகளில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். அதே நேரம் கடை வீதிகளில் உள்ள தானிய மண்டிகளில் தானியங்களை வாங்க விவசாயிகள் படையெடுத்துள்ளதால் அங்கு வியாபாரம்

களைகட்டியுள்ளது. கடந்த வருடத்தை விட தானியங்கள் விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.காங்கயம் பகுதியில் தற்போது வெள்ளை சோளம் கிலோ ரூ.55, கொள்ளு ரூ.35, நரிப்பயறு கிலோ ரூ.100, பாசிப்பயறு கிலோ ரூ.80, தட்டைப்பயறு கிலோ ரூ.80, உளுந்து கிலோ ரூ.55 என்ற விலையில் விற்பனையானது. காங்கயம் நகரில் சுமார் 10க்கும் மேற்பட்ட தானிய மண்டிகள் உள்ளன. நேற்று ஒருநாளில் மட்டும் சுமார் 500 மூட்டைக்கும் மேல் தானியங்கள் விற்பனையானதாக வியாபாரிகள் தரப்பில் தெரிவித்தனர். வரும் நாட்களில் இன்னும் அதிகளவில் விற்பனையாகும் என வியாபாரிகள் எதிர்பார்த்துள்ளனர்.

## பருத்தி பஞ்சு வர்த்தகத்துக்கு கட்டுப்பாடு

திருப்பூர், :பருத்தி பஞ்சு வர்த்தகத்துக்கு கட்டுப்பாடு கொண்டு வரவேண்டும் என, தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர் சங்கம் (சைமா) கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து, 'சைமா' தலைவர் ஈஸ்வரன், பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ள கடித விவரம்:நுகர்வோர் பயன்படுத்தும் அத்தியாவசிய பொருட்களின் சில்லரை வினியோக விலையை கட்டுப்படுத்தும் வகையில் மத்திய அரசு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர திட்டமிட்டிருப்பதை 'சைமா' வரவேற்கிறது. உணவு பொருட்கள் போன்று ஆடையும் அத்தியாவசியமானதாக உள்ளது. விவசாயத்துக்கு அடுத்த நிலையில் உள்ள ஜவுளித்துறை பல லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குகிறது.

பஞ்சு விலை உயர்வால் சமீபகாலமாக பல்வேறு சிக்கல்களை சந்தித்து வருகிறது.பஞ்சு பதுக்கி வைத்து விலையை உயர்த்துவதே இதற்கு முக்கிய காரணம். பின்னலாடை துறை ஆண்டுக்கு 25 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் அன்னிய செலாவணியையும், ரூ.10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் உள்நாட்டு விற்பனை வாயிலாக அரசுக்கு வரி வருவாயும் ஈட்டித் தருகிறது. தொழில் வளர்ச்சி கருதி கொள்முதல் செய்யப்படும் பருத்தி பஞ்சை, நூல் உற்பத்தியாளர்களுக்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.அத்தியாவசிய பொருட்கள் பட்டியலில் பஞ்சை சேர்க்க வேண்டும். இதனால், பஞ்சு பதுக்கி வைத்து செயற்கையாக விலை உயர்வதை தடுக்கலாம்.வரும் நவம்பர் மாதம்

துவங்கும் சீசன் முதல், பஞ்சு வர்த்தகத்துக்கான கட்டுப்பாடுகளை அமல்படுத்த வேண்டும். இவ்வாறு கூறியுள்ளார்.

## குன்னூரில் பரவலான மழையால் ஜிம்கானா அணை நிரம்பியது

குன்னூர், : குன்னூர் பகுதியில் போதிய மழையின்றி கடும் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. நீர்ப்பிடிப்பு பகுதிகளும் வறண்டு போனதால் மாதம் ஒருமுறை கூட குடிநீர் விநியோகம் ெசய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தனியார் வாகனங்கள் மூலம் தண்ணீரை விற்பனை செய்து வருகின்றனர்.இதற்கும் தற்போது விலை 2 மடங்கு உயர்ந்துள்ளது. மேலும் கேன் தண்ணீருக்கும் தட்டுப்பாடு அதிகரித்துள்ளதால் 20 லிட்டர் கேன் ரூ.35க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது இதன் விலை ரூ.50 முதல் ரூ.60 வரை உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் அனைத்து தரப்பு மக்களும் பாதிப்படைந்து உள்ளனர்.

கடந்த 2 நாட்களாக பரவலாக பெய்த மழையால் ஜிம்கானா குடிநீ–ர் தடுப்பணை நிரம்பியுள்ளது. தொடர்ந்து மழை பெய்ய வேண்டி மக்கள் வருண பகவானுக்கு சிறப்பு பூஜை நடத்தி வருகின்றனர். மேலும் மழைநீரையும் விடிய விடிய பொதுமக்கள் சேகரித்து வருகின்றனர்.

## தொடர் மழையால் காய்கறி விதைப்பு பணி துவக்கம்

ஊட்டி, : நீலகிரி மாவட்டத்தில் இந்தாண்டு தென்மேற்கு பருவமழை பொய்ததால் தேயிலை விவசாயம் மற்றும் மலை காய்கறி விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. மலைப்பாங்கான பகுதிகளில் போதுமான தண்ணீர் இல்லாத நிலையில் விவசாயம் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. வட கிழக்கு பருவமழை இம்மாதம் 20ம் தேதிக்கு மேல் துவங்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. எனினும், அதற்கு முன்னதாகவே நீலகிரி மாவட்டத்தில் மழை துவங்கி கடந்த மூன்று நாட்களாக பெய்து வருகிறது. இதனை தொடர்ந்து நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் தற்போது விவசாயிகள் காய்கறி விதைப்பு பணியை துவக்கியுள்ளனர். நேற்று பல இடங்களில் விதைப்பு பணிகளும், தேயிலை செடிகளுக்கு உரமிடும் பணியை விவசாயிகள் மேற்கொண்டனர்.

## பஞ்சலிங்க அருவியில் தண்ணீர் வரத்து

உடுமலை, உடுமலை அருகே உள்ள திருமூர்த்திமலையில் அமணலிங்கேஸ்வரர் கோயில் உள்ளது. அமாவாசை மற்றும் பண்டிகை நாட்களில் இந்த கோயிலுக்கு பக்தர்கள் அதிகளவில் வருவார்கள். கடந்த இரு மாதங்களாக இங்கு மழை பெய்யாமல் கடும் வறட்சி நிலவியது. கோயிலுக்கு வந்த பக்தர்கள் அணையில் குளித்து சென்றனர். நேற்று முன்தினம் இரவு திருமூர்த்திமலையில் கனமழை பெய்தது. காட்டாறுகளில் பெருக்கெடுத்த வெள்ளம் பஞ்சலிங்க அருவியில் கொட்டியது.

## நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி

திருச்சி, : திருச்சி கொட்டப்பட்டு கோழிப்பண்ணை சாலையில் உள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் இலவச நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி வரும் 18, 19ம் தேதிகளில் நடக்கிறது. இதில் நாட்டுக்கோழி இனங்கள், தரம் உயர்த்தப்பட்ட நாட்டுக்கோழி இனங்கள், நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

பயிற்சியில் சேர விரும்புவோர் வரும் 18ம் தேதி காலை 10 மணிக்குள் நேரில் வர வேண்டும். இவ்வாறு திருச்சி கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய பேராசிரியரும், தலைவருமான ரிச்சர்டு ஜெகதீசன் தெரிவித்துள்ளார்.

## அரவக்குறிச்சி பகுதிகளில் கன மழை

அரவக்குறிச்சி : அரவக்குறிச்சி பகுதிகளில் நேற்று 2 மணி நேரம் கன மழை பெய்தது. அரவக்குறிச்சி மற்றும் சுற்றுப் பகுதிகளில் கடந்த ஒரு வாரமாகவே கோடை காலத்தைப் போல கடும் வெயில் அடித்து வந்தது. இதனால் தினமும் பகல் 12 மணி முதல் 4 மணி அதிகமான வெப்பமான சூழ்நிலை நிலவியது. மேலும் இரவில் வெப்பத் தாக்கம் தாங்காமல் பொதுமக்கள் தவித்தனர்.

இந்நிலையில் நேற்று மாலை 3 மணிக்கு மேல் கருமேகங்கள் திரண்டு மழை வருவதற்கான அறிகுறியை ஏற்படுத்தியது. சிறிது நேரத்தில் கன மழையாக பெய்தது. இதனால் சாலைகளில் நீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கியது. 2 மணி நேரம் பெய்த மழையால் குளிர்ந்த

சூழ்நிலை நிலவியது. இந்த மழையால் விவசாய கிணறு மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் நீர் மட்டம் உயரும் வாய்ப்புள்ளது. இதனால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## 21ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

தஞ்சை, : தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் வருகிற 21ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது என்று கலெக்டர் அண்ணாதுரை தெரிவித்துள்ளார். தஞ்சையில் வரும் 21ம் தேதி காலை 10 மணிக்கு புதிய கலெக்டர் அலுவலக வளாகத்தின் கீழ்தளத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்கிறது. இந்த கூட்டத்தில் விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயம் தொடர்பான கருத்துகளை தெரிவிக்க வேண்டும் என்று கலெக்டர் தெரிவித்துள்ளார்.